புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | அக்டோபர் 27, 2022 | புரட்சி 21 | முழக்கம் 41 | விலை: ரூ.3.00

## வைதீக சூழ்ச்சிகளை அம்பலப்படுத்திய கருத்தரங்கம்

# வள்ளலார் ‘ஜோதி’யில் கலந்தாரா?






‘வைதீகத்தை எதிர்த்த வள்ளலார்’ எனும் தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்த கருத்தரங்கம், அக்டோபர் 22, மாலை சென்னை அன்பகத்தில் சிறப்புடன் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடக்க உரை யாற்றினார். முன்னதாக வைதீக எதிர்ப்புப் புரட்சிகரப் பாடல் களுடன் பாடகர் கோவன் குழுவினர் நடத்திய கலை நிகழ்ச்சி அரங்கை சூடேற்றியது.

“இந்த அரங்கில் தலைசிறந்த ஆளுமைகள், துடிப்பு மிக்க இளைஞர்கள், பெண்கள் என்று அரங்கத்தில் கூடியிருப்பதைப் பார்க்கும்போது மிகுந்த நம்பிக்கை யும் எழுச்சியும் உருவாகிறது” என்று கோவன் குறிப்பிட்டார்.

மு.வெ. சத்தியவேல் முருகனார் ‘ஆகமங்களும் அர்ச்சகர்களும்’ எனும் தலைப்பிலும், பேராசிரியர் வீ. அரசு, ‘வள்ளலாரின் இறுதிப் பத்தாண்டுகள்’ எனும் தலைப்பிலும், பேராசிரியர் கருணானந்தன், ‘வள்ளலார் வைதீக எதிர்ப்பு’ எனும் தலைப்பிலும், நிறைவாக கொளத்தூர் மணி, ‘வள்ளாருக்குப் பிறகு பார்ப்பனியம், வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சபையில் உருவ வழிபாட்டைத் தொடங்கி, பார்ப்பனியமாக்கி, வள்ளலாரின் இலட்சியங்களை அழித்தொழிக்க நடத்திய சதிகளை’ விளக்கியும் உரையாற்றினார். நிகழ்வில் நன்செய் பதிப்பகம் மாணவர்கள், இளைஞர்களை பெரியாரியல் கொள்கைக்கு ஈர்க்கும் நோக்கத்தோடு அதற்கான வாழ்வியலை விளக்கிடும் ‘இரகசிய புத்தகம்’ என்ற நூல் வெளியிடப்பட்டது. பெரியார் மய்யம் இதைத் தொகுத்துள்ளது.

கருத்தரங்கில் பேசிய பேராசிரியர் கருணானந்தன், “வள்ளலார் வைதீகத்தையும் பவுராணிகத்தையும் (கோயில், சிலை வழிபாடு) சேர்த்து எதிர்த்ததால், அவரை மக்களிடமிருந்து பிரிக்க ‘ஜோதியில் கலந்தார்’ என்ற சூழ்ச்சியை அரங்கேற்றினார்கள்” என்று விளக்கினார். அவரது உரையிலிருந்து சில பகுதிகள்:

“இந்த அரங்கில் இருப்பவர்கள், நாத்திகர் களோ, ஆத்திகர்களோ அல்லது கடவுள் பற்றி அக்கறை இல்லாதவர்களோ (Agnostic) நிறைந்திருக்கிறார்கள். நம்மை இங்கு எது இணைத்திருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும், ’மனிதம்’. மனித மான்பு, மனித சமத்துவம், மனித முன்னேற்றம் இந்த அடிப்படையில் அக்கறை உள்ளதினால், ஆர்வத்தினால் நாம் இங்கே இணைந்திருக் கிறோம். ஆத்திகம் பேசியதாக கூறப்படும் வள்ளலாருக்கும், நாத்திகம் பேசிய பெரியாருக்கும் கடவுள் ஒரு மய்யப் பொருளே அல்ல. இருவரது மய்யப் புள்ளியும் மனிதம் தான். கடவுளுக்கு மனித உதவி தேவைப் படுமா? சர்வ சக்தி பொருந்திய கடவுளை மனிதன் வந்து தான் உயர்த்திப் பிடிக்க வேண்டுமா? எந்த தத்துவமும் மனிதனை மய்யப்படுத்தி இருக்கும் போது தான் அது இந்த சமூகத்திற்குப் பொருந்து கிறது. நீங்கள் கூறுகின்ற கடவுள் இருக்கின்றாரா என்று ஆராய்வது எங்கள் வேலை. அந்த ஆய்வினால் மனிதத்திற்கு எதாவது பயன் உண்டா என்பது எங்கள் வேலை. தீபாவளி வாழ்த்தையும் நான் கூற வேண்டும். ஏன் கூற வேண்டும்? மகாவீரரின் இறுதி நாள் இதுதான். வைதீகத்தை எதிர்த்த மகாவீரரை மறக்க செய்வதற்காக தீபாவளியை உருவாக்கியிருக் கிறார்கள். வைதீகத்தை எதிர்த்த வள்ளலார் என்பது கருத்தரங்க தலைப்பு. நாம் இன்று நடைமுறையில் பேசுகின்ற வைதீகம் என்பது பார்ப்பனீயம் என்று பொருள். பல முகமூடிகள் பார்ப்பனியத்திற்கு உண்டு. வைதீகம் என்று கூறினால் பார்ப்பனியம், சனாதனம் என்று கூறினால் பார்ப்பனியம், வர்ணாஸ்ரமம் என்று கூறினால் பார்ப்பனியம், ஆரிய மதம் என்றால் பார்ப்பனியம், பௌராணீகம் என்றால் பார்ப் பனியம். இப்படி பல முகமூடிகள் இருக்கின்றன. இந்த முகமூடிகளில் வசதிக்காக நாம் வைதீகம் என்ற ஒன்றை எடுத்துக் கொண்டோம். வைதீகம் என்றால் வேதம் சார்ந்தது என்று பொருள். வேதம் என்றால் அவர்கள் கூறுகிற, ரிக், யஜுர், சாம, அதர்வண என்ற நான்கு வேதங்கள் என்று பொருள். வேதாந்தம் என்பது வேதத்தை மறுப்பதாக பொருள். வேதத்தை முடிவுக்கு கொண்டு வருவதாக பொருள். அதையும் வேதத்தின் சாரமாக நம்மை நம்பச் செய்தார்கள். விளக்கங்கள் மூலமாக மூலத்தை திரித்து விட்டார்கள். வேதாகமம் என்ற சொல்லை வள்ளலாரும் பயன்படுத்தி இருக்கிறார்.

ஆகமம் என்ற சொல் நிறுவன மயப்பட்ட வழிபாட்டு முறைக்கு செயல்முறை விளக்கங் களை கூறுவது என்று பொருள். அது கோவில் சார்ந்தது சிலை சார்ந்தது. வள்ளலார் வைதீகத்தை மட்டுமல்ல, வைதீகத்தின் இரண்டாம் முகமான பௌராணீகத்தை யும் எதிர்த்துப் போராடினார். புராணம் என்பது எப்படி வந்தது? ஆதி கால ஆரியர்களுக்கு பல கடவுள் மீது நம்பிக்கைக் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் polytheism என்று சொல்லக் கூடிய பல கடவுள் கொண்ட நம்பிக்கை கடவுளை அடிக்கடி மாற்றிக் கொள்வார்கள். வசதிக்காக ஒரு கடவுளை முன்னிலைப்படுத்தி பிற கடவுளை பின் நிலைப் படுத்துவார்கள். போர் என்றால் இந்திரனை முன்னிலைப்படுத்து வார்கள். ‘யக்ஞம்’ என்றால் சோமனை முன்னிலைப்படுத்துவார்கள். இப்படி வசதிக்காக கடவுளை வரிசைப்படுத்தும் நம்பிக்கை முறையை வேத கால ஆரியர்கள் கொண்டிருந் தார்கள்.

நாம் கடவுள்களைப் பார்க்கும் போது இரண்டு விதமாக பார்க்கிறோம். ஒன்று கற்பிதக் கடவுள், இரண்டு கருத்தியல் கடவுள். வள்ளலார் அருட் பெருஞ்சோதி என்று கூறியது கருத்தியல் கடவுள். சிவன் என்று வருகிறது அது கற்பிதக் கடவுள். சிவனை சிவமாக மாற்றுகிற போது அது கருத்தியல் கடவுள். சைவ சித்தாந்தம் சிவனை சிவமாக மாற்றியது. ‘அன்பே சிவம்’ என்று தான் கூறியது. அன்பே சிவன் என்று கூறவில்லை. கற்பிதம், கருத்தியல் இரண்டிற்கும் உண்டான வேறுபாட்டை நாம் தெரிந்து கொண்டு நாம் இந்த வைதீகத்தைப் பற்றி விளங்கிக் கொள்ள வேண்டும். போரில் வெற்றி பெறுவதற்கு யாகத்தில் பலியிட வேண்டும், மேலே இருக்கிற கடவுள் உங்களுக்கு துணை இருப்பார் என்று மோசடி செய்கிற தோத்திரப் பாடல்களை நம்பி ஏமாறுவதற்கு ஏமாளிகள் இருந்தார்கள், ஏமாந்தார்கள். அதை இந்தியா முழுமைக்கும் விஸ்தரித்தார்கள். அதைத்தான் Brahmanisation of india என்று கூறுவார்கள்.

பிராமணிய மயம் என்பது மன்னர்களின் படையெடுப்புக்களால் வந்தது அல்ல. அசோகன் படையெடுத்தான். ஆனால் பிராமணியத்தை

(4ஆம் பக்கம்)

## போக்குவரத்து விதிகளை மீறினால் பூங்கொத்து: ‘சந்தி சிரிக்கும்’ குஜராத் மாடல்

விபத்துகளைத் தடுக்க போக்குவரத்து விதிகளை மீறுவோர், குடித்து விட்டு வண்டி ஓட்டுவோர்களுக்கு அபராதத் தொகையைக் கடுமையாக உயர்த்தியிருக்கிறது – தி.மு.க. ஆட்சி; இது திராவிட மாடல் ஆட்சி.

குஜராத்தில் என்ன நடக்கிறது?

போக்குவரத்து விதியை மீறுவோருக்கு போலீசார் அபராதம் விதிக்க மாட்டார்களாம். மாறாக, போலீசார் அவர்களுக்கு பூக்களை வழங்கி பாராட்டுவார்களாம். தீபாவளிக்காக வரும் 27ஆம் தேதி வரை இது நடைமுறையில் இருக்கும். குஜராத் உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்வி, மாநில முதல்வர் பூபேந்திரபட்டில் வழிகாட்டுதலின்படி இதை அறிவித்துள்ளனர். விபத்துகள் நடந்தாலோ உயிரிழப்புகள் நடந்தாலோ அது பற்றி கவலை இல்லை. கொலை கொள்ளைகளில் ஈடுபடுவோருக்கு தீபாவளி பரிசாக அரசு பணமுடிப்புகூட வழங்கி கவுரவிக்கும் அறிவிப்பு வந்தாலும் வியப்பதற்கு இல்லை.

– இது குஜராத் மாடல்.

தேர்தலில் ஓட்டு வாங்க இவ்வளவு கேவலமான அறிவிப்புகளை குஜராத் ஆட்சி அறிவித்துக் கொண்டிருப்பது வெட்கக் கேடு.

## அமீத்ஷா குழுவின் இந்தித் திணிப்பு முயற்சிகள் ஆட்சி மொழி சட்டத்துக்கே எதிரானது

***நாடாளுமன்றத்தின் செயலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பி.டி.டி. ஆச்சாரி – அமித்ஷா குழுவின் இந்தித் திணிப்புப் பரிந்துரைகள் ஆட்சி மொழி சட்டத்துக்கே எதிரானது என்பதை விளக்கி ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (அக்.21) எழுதியுள்ள கட்டுரையின் சுருக்கமான தமிழ் வடிவம்.***

- அமித்ஷா தலைமையிலான நாடாளுமன்றக் குழு குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்துள்ள இந்தித் திணிப்பு பரிந்துரைகளுக்கான அறிக்கையில் ஒன்றிய ஆட்சியின் கல்வி நிறுவனங்களான அய்.அய்.டி., அய்.அய்.எம். மற்றும் கேந்திரா வித்யாலயாக்களில் இந்தி மட்டுமே பயிற்சி மொழி என்று கூறி ஆங்கிலத்தை அகற்றுகிறது. அரசியல் சட்டப்படி மாநில அரசுகள் இதை அமுல்படுத்த வேண்டியது கட்டாயமாகிறது.
- ஏனைய நாடாளுமன்றக் குழுவுக்கும் ஆட்சி மொழிக் குழுவுக்கும் வேறுபாடு உண்டு. இந்தக் குழு ஆட்சி மொழிச் சட்டம் 1963 -4ஆவது பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட அரசியல் சட்ட அங்கீகாரம் பெற்ற குழு. ஆட்சி மொழியான இந்திப் பயன்பாட்டின் முன்னேற்றம் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு.
- குடியரசுத் தலைவரிடம் நேரடியாகக் குழு பரிந்துரைகளை சமர்ப்பிக்க வேண்டும். குடியரசுத் தலைவர் குழுவின் பரிந்துரைகளை மொத்தமாகவோ அல்லது பகுதியாகவோ செயல்படுத்தியாக வேண்டும். சட்டப்படி கிடப்பில் போட்டுவிட முடியாது.
- ஆட்சி மொழி குறித்து அரசியல் நிர்ணயசபையில் கடுமையான விவாதங்களுக்குப் பிறகு தேவநாகரி எழுத்து வடிவம் கொண்ட இந்தி, ஆட்சி மொழியாக்கப்பட்டது. அரசியல் சட்டத்தின் 343ஆவது பிரிவு இதை பிரகடனப்படுத்துகிறது. அத்துடன் அரசியல் சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து 15 ஆண்டுகள் ஆங்கிலமும் தொடர்ந்து நீடிக்கும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 1963இல் ஆங்கிலமும் காலவரையின்றி ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று நாடாளுமன்றம் சட்டம் இயற்றியது. ஒன்றிய ஆட்சியின் நிர்வாகம் நாடாளுமன்றம், நீதிமன்ற செயல்பாடுகளில் அதன் காரணமாகவே ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த நிலையில் ஒன்றிய ஆட்சியின் உயர் கல்வி நிறுவனங்களில் ஆங்கிலத்தை முழுமையாக அகற்றி விட்டு இந்தியைப் பயன்படுத்த வேண்டும் என்ற அமீத்ஷா குழுவின் பரிந்துரை குடியரசுத் தலைவருக்கு சட்ட சிக்கல்களை உருவாக்கியுள்ளது.
- இந்தியை ஆட்சி மொழியாக்கும் நோக்கத்தில் செயல்பாடுகள் முன்னேற்றம் பற்றி ஆராய்வதே ஆட்சி மொழிக் குழுவுக்கான சட்டப்பூர்வ கடமை. அதையும் தாண்டி, பயிற்று மொழி எதுவாக இருத்தல் வேண்டும் என்று கருத்து கூறும் சட்டப்படியான உரிமை குழுவுக்குக் கிடையாது. ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என்று பரிந்துரைக்கும் சட்ட உரிமையும் குழுவுக்குக் கிடையாது. (குழு, சட்டத்தை மீறி செயல்பட்டுள்ளது)
- ஆங்கிலத்தை அகற்றி விட்டு இந்தியை மட்டுமே திணிக்கும் ஒன்றிய ஆட்சியின் முயற்சிகளை தென்னகம் கடுமையாக எதிர்த்தது. ஆங்கிலம் அகற்றப்பட்டு இந்தி மட்டுமே என்ற நிலை வந்து விட்டால், அகில இந்திய பணியிடங்களுக்கான தேர்வுகளை தென்னாட்டினரும் இந்தியில் மட்டுமே எழுத வேண்டும். இதனால் தென்னாட்டு மாணவர்கள் கடும் பின்னடைவை சந்திப்பார்கள். இதைக் கருத்தில் கொண்டு தான் அரசியல் சட்டத்திலேயே 344(3) என்ற பிரிவு உருவாக்கப்பட்டது.
- அரசுத் துறைப் பணிகளில் இந்தி பேசாத மாநிலங்களின் கருத்துகள் அவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு அதற்கு உரிய மரியாதை தர வேண்டும் (due regard to the just claims and interests of persons belonging to non-Hindi speaking areas) என்று அந்த சட்டப் பிரிவு தெளிவாகக் கூறுகிறது.
- அரசியல் நிர்ணய சபையில் பேசிய மவுலானா ஆசாத், “தெற்கு-வடக்கு இரண்டும் வெவ்வேறானவை. வெவ்வேறு மொழிக் குடும்பம் என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். இரண்டையும் இணைப்பது ஆங்கிலம் மட்டும் தான். ஆங்கிலத்தை அகற்றி விட்டால் தெற்கு வடக்கு - ஒற்றுமை முடிவுக்கு வந்து விடும்” என்று எச்சரித்தார்.
- இந்தியும் உருதும் கலந்தது இந்துஸ்தானி. சுதந்திரப் போராட்டக் காலங்களில் இந்துஸ்தானி தான் பயன்படுத்தப்பட்டது. அந்த அடிப்படையில் தான் ஆட்சி மொழி பற்றிய கருத்தாக்கமே எழுந்தது. பிறகு அரசியல் நிர்ணய சபையில் இந்துஸ்தானி கைவிடப்பட்டு ‘இந்தி’யை முன்மொழிந்தார்கள் (பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இஸ்லாமியர்கள் பேசிய உருது மொழி கலப்புடன் கூடிய இந்துஸ்தானியை மறுத்து சமஸ்கிருதக் கலப்புடன் உருவான இந்தியை பார்ப்பனர்கள் ஆட்சி மொழியாக்க வலியுறுத்தினார்கள் - ஆர்). இந்த வரலாறுகளை கவனத்தில் கொள்ளாமல் இந்தித் திணிப்பு தீவிரமானால் அது கடும் பாதிப்புகளை உருவாக்கி விடும்.
- அரசியல் நிர்ணய சபை செயல்பட்ட காலம் இப்போது இல்லை. எனவே இந்தியை மட்டும் நிர்வாக மொழியாக ஏற்பது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகிவிடும். அறிவியல் தொழில் நுட்பம் சர்வதேச தொடர்புகளுக்கு ஆங்கிலம் அவசியமாகிவிட்டது. ஆங்கிலத்தைப் புறக்கணித்து விட்டு வளர்ச்சிப் பாதையில் நாட்டைக் கொண்டு செல்ல முடியாது என்பதை ஒன்றிய ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

**தமிழில் : ‘இரா’**

# வள்ளலார் வரலாறு திரும்புகிறது

சிதம்பரத்துக்கு அருகில் உள்ள மருதூர் கிராமத்தில் 1823 அக்டோபரில் கருணீகர் (கணக்குப் பிள்ளை) மரபில் பிறந்தவர் இராமலிங்கனார்.

அவர் முதலில் பாடிய ‘பாமாலை’யில்

> “பெருநெறி பிடித் தொழுக வேண்டும்
> மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்”

என்று எழுதினார்.

உருவ வழிபாடு, வேதம், ஆகமங்களைக் கடுமையாக எதிர்த்தார். 1872 ஜன. 25இல் வடலூரில் உருவ வழிபாடு இல்லாமல் ஒளியை மட்டுமே வணங்கும் ‘ஞான சபை’யைத் தொடங்கினார். இது எல்லா மதங்களுக்கும் பொதுவானது என்று அறிவித்தார்.

தில்லை நடராசன் பக்தராக இருந்தவர் தான்; அங்கே வழிபடச் சென்றபோது தீட்சதர்கள் அனுமதிக்கவில்லை. சினமடைந்த அவர், “இந்தக் கோயிலுக்கு எதிராக ஒரு தலத்தை உண்டாக்கி அங்கே நடராசனை அழைத்துக் கொள்ளப் போகிறேன்” என்று அறிவித்தார். (ஆதாரம்: 1904இல் பு. பாலசுந்தர நாயகர் எழுதிய “இராமலிங்க பிள்ளை பாடல்)

50 ஆண்டுகாலம் வாழ்ந்த வள்ளலார், கடைசி 10 ஆண்டு காலத்தில் தனது சைவம், முருகன், ஆகம பக்திகளைத் துறந்தார். “நாம் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனினும் இலட்சியம் வைக்க வேண்டாம்” என்று மக்களைக் கேட்டுக் கொண்டார்.

அதேபோல் சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம்” என்றார். அதனால் அவரது இறுதி எழுத்தான 6ஆம் திருமுறை பலராலும் இருட்டடிக்கப்பட்டது.

பெரியார் வள்ளலாரின் 6ஆம் திருமுறையிலிருந்து தேர்வு செய்யப்பட்ட பாடல் தொகுப்பை குடிஅரசு பதிப்பகம் சார்பில் நூலாக வெளியிட்டார். பெரியார் ஒரு முறை வடலூருக்கு சென்றபோது புலால் உண்போர் உள்ளே வர வேண்டாம் என்ற அறிவிப்பை மதித்து, திரும்பினார் என்ற வரலாற்றுக் குறிப்பு உண்டு.

1874 ஜன. 30இல் தமது அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டவர் திரும்பி வரவில்லை. மூன்று மாதங்களுக்குப் பிறகு தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கதவைத் திறந்தபோது இராமலிங்கனார் இருந்ததற்கான எவ்வித அடையாளமும் இல்லை. அவரது மறைவு குறித்து பல்வேறு செய்திகள் உலவுகின்றன.

சமூக சீர்திருத்தம் பேசிய வள்ளலார் இறுதி காலத்தில் உள்ளம் உடைந்தார். பார்ப்பன ஆதிக்கம் தலைவிரித்தாடிய அக்கால சமூகச் சூழலில் அவரது பயணம் தொடர்ந்தது.

“கடை விரித்தோம் கொள்வாரில்லை கட்டி விட்டோம்” என்று மனம் உடைந்த அதே வள்ளலாருக்கு இன்று திராவிட ஆட்சி விழா எடுத்து பரப்புகிறது; வரலாறு திரும்புகிறது.

வள்ளலாரின் வைதீக எதிர்ப்பை மக்களிடம் கொண்டு செல்வோம்.

**- சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம்**

## தீபாவளி; கஷ்டம் - நஷ்டம்



தீபாவளிப் பண்டிகையென்று கஷ்டமும் – நஷ்டமும் கொடுக்கத்தக்க பண்டிகையொன்று வந்து போகின்றது. அதிலும் ஏதாவது அறிவுடைமை உண்டா என்று கேட்கின்றேன். தீபாவளிப் பண்டிகையின் கதையும் மிக்க ஆபாசமானதும், இழிவானதும், காட்டுமிராண்டித் தனமானதுமாகும். அதாவது, விஷ்ணு என்னும் கடவுள் பன்றி உருக்கொண்டு பூமியை புணர்ந்ததன் மூலம் பெறப்பட்டவனான் நரகாசுரன் என்பவன், வருணனுடைய குடையைப் பிடுங்கிக் கொண்டதால் விஷ்ணுக் கடவுள் நரகாசுரனைக் கொன்றாராம். இதைக் கொண்டாடப் படுவதற்காக தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறதாம்.

**- ‘குடிஅரசு’ 20.10.1929**

# குஜராத்தி அதானி சுரண்டல்: அடுக்கடுக்கான ஆதாரங்கள்

***மோடி – அமித்ஷா – அதானி என்ற மூன்று குஜராத்திகளின் பிடிகளில் இந்தியாவின் பொருளாதாரமும் அரசியலும் சிக்கிக் கொண்டிருக்கிறது. அதானி கொள்ளைகளை விவரிக்கிறது இக்கட்டுரை. (கடந்த இதழ் தொடர்ச்சி)***

கடந்த 15 ஆண்டுகளில் அதானியின் வளர்ச்சி அபரிதமாக இருந்துள்ளது. 2006-07 நிதியாண்டில் அதானி குழுமத்தின் வருமானம் ரூ.16,953 கோடி. இதில் கடன் மட்டும் ரூ.4,353 கோடி. இதுவே 2012-13 நிதியாண்டில், வருமானம் ரூ.47,352 கோடி எனவும் கடன் ரூ.81,122 எனவும் இருந்தது. மோடி 2014இல் பிரதமராக பதவியேற்கும் போது அதானியின் நிகர மதிப்பு 7.1 பில்லியன் டாலர்கள். அது தற்போது 137 பில்லியன் டாலர்கள் என்றளவிற்கு உயர்ந்துள்ளது. இதற்கு பின்னால் மோடி அரசு பின்புலத்தில் வங்கிகள் கொடுத்த கடனே உள்ளது என்பதை அறிய முடிகிறது.

2014-க்கு பிறகு மோடி அரசு 4.6 லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்த பிறகும், அதானிக்கு தற்போது 30 பில்லியன் டாலர்கள் கடன் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

உலகளவில் மிகவும் பிரபலமாக இருக்கும் பின்ச் குரூப்-ன் கிளை நிறுவனமான Credit Sights அதானி குழுமத்தின் கடன் மற்றும் வேகமான வர்த்தக விரிவாக்கத்தை ஆய்வு செய்து “Deeply Overleveraged” என அறிவித்துள்ளது. அதாவது அதானி குழுமத்தின் சந்தை மதிப்பைக் காட்டிலும் கடன் அளவு அதிகப்படியாக உள்ளது என்பது பொருள்.

ஆசியாவின் மிகப்பெரும் பணக்காரரான அதானி தலைமையிலான அதானி குழுமம் கடந்த 5 வருடத்தில் ஏற்கனவே வர்த்தகம் செய்து வந்த துறைகளைத் தாண்டி பல புதிய துறைகளில் முதலீடு செய்து தனது வர்த்தகங்களை ராக்கெட் வேகத்தில் விரிவாக்கம் செய்து வருகிறது. ஆனால் இதில் 90 சதவீத விரிவாக்கம் மற்றும் முதலீட்டு பணம் கடன் வாயிலாக வந்தது என்பதால் அதானி குழுமத்தின் கடன் அளவீடுகள் மற்றும் பணப் புழக்கத்தின் மீது அதிகப்படியான அழுத்தத்தை உருவாக்கியுள்ளது எனவும் கிரெடிட்சைட்ஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளது.

இந்த நிலை தொடர்ந்தாலோ அல்லது ஏதாவது ஒரு வர்த்தகம் மோசமான வர்த்தக நிலைக்குத் தள்ளப்பட்டாலோ அதானி குழுமம் கழுத்து வரையில் கடன்களை வைத்திருக்கும் காரணத்தால் மோசமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கடன் வலைக்குள் தள்ளப்படும் வாய்ப்புகள் உள்ளது எனவும் கிரெடிட்சைட்ஸ் கூறியுள்ளது.

அதானி குழுமம், புதிய மற்றும் தொடர்பில்லாத வணிகங்களில் நுழைவதால் அத்தகைய புதிய வணிகங்கள் பெரும்பாலும் அதிக மூலதனம் மிகுந்தவை என்பதால் செயல்படுத்தல் மற்றும் மேற்பார்வை குறித்த கவலைகள் எழுப்புகின்றன என அதானி குழுமத்தில் இருக்கும் முக்கியப் பிரச்சனைகளை கிரெடிட்சைட்ஸ் பட்டியலிடுகிறது. அதானி குழுமத்தின் நிறுவனர் கௌதம் அதானி, பிரதமர் மோடி அரசுடன் “வலுவான உறவை பெற்றுள்ளார். இதே போல பல அரசு கொள்கை முடிவுகள்



அதானி குழுமத்திற்கு சாதகமாக விளங்குகிறது” எனவும் கிரெடிட்சைட்ஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

- அதானி குழுமம் பெற்ற முக்கிய கடன்கள் (ஏப்ரல் 2020 முதல் ஜூன் 2022 வரை) ரூ. 48,000 கோடி. இதில் கிட்டத்தட்ட 40 சதவீதம் அதாவது ரூ.18,770 கோடி அரசு வங்கியான ‘பாரத் ஸ்டேட் வங்கி’யால் மட்டும் அளிக்கப்பட்டுள்ளது. அதே போல குஜராத்தில் உள்ள முந்த்ராவில் PVC ஆலையை கட்டுவதற்கு 14,000 கோடி கடனுக்காக அதானி குழுமம் பாரத ஸ்டேட் வங்கியை (SBI) அணுகியுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில்தான் நவி மும்பையில் உள்ள கிரீன்பீல்ட் சர்வதேச விமான நிலையத்திற்காக 12,770 கோடி பாரத ஸ்டேட் வங்கியிடம் அதானி குழுமம் வாங்கியது குறிப்பிடத்தக்கது.
- அதானியின் நிறுவனம் முந்த்ரா துறைமுகத்தில் புதிய செப்பு சுத்திகரிப்பு திட்டத்திற்காக $6,071 கோடி திரட்டியுள்ளது. மார்ச் 2022 இறுதியில், அதானி குழும நிறுவனங்களின் மொத்தக் கடன், முந்தைய ஆண்டைவிட 42 சதவீதம் அதிகரித்து 2.22 லட்சம் கோடியை எட்டியுள்ளது. இவ்வாறு பல இலட்சக் கணக்கான கோடிகளில் இந்திய மக்களின் பணத்தை கடனாக வாரி வழங்கி மோடி அரசு அவரை உலகின் மூன்றாம் பணக்காரராக ஆக்கியுள்ளது.
- அதானியின் இந்த வளர்ச்சி கொரானா பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த காலகட்டத்தில் நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்திற்கு சென்றது. ஏழை, எளிய, நடுத்தர வர்க்கத்தினர் என நாட்டின் 90% அதிகமான மக்கள் பொருளாதார ரீதியாக நலிவடைந்த நிலையில், அவர்களை சந்தையாக கொண்ட அதானி குழுமம் அசுர வளர்ச்சியை அடைந்துள்ளது எனில், நம் மக்களை சுரண்ட அதானியை மோடி அரசு அனுமதித்துள்ளது.

முன்னாள் ஆர்பிஐ ஆளுநர் ரகுராம் ராஜன் ஒரு கூட்டத்தில் நிலம், இயற்கை வளங்கள், அரசு ஒப்பந்தங்கள்/உரிமங்கள் தான் இந்திய பணக்காரர்கள் பலரின் பெரிய வருவாய் மூலங்களாக இருக்கின்றன என்றார். அதற்கு “ரிசோர்ஸ் ராஜ்” எனவும் அவர் பெயரிட்டார். அவர் அன்று அவ்வாறு குறிப்பிட்டது அதானி, அம்பானி போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சரியாக பொருந்துகிறது.

இந்தியாவில் ஏழை மற்றும் பணக்காரர்களுக்கு இடையே சமத்துவமின்மை வரலாறு காணாத அளவுக்கு மிகவும் அதிகரித்திருப்பதாக பிரான்ஸ் நாட்டு பொருளாதார அறிஞர் தாமஸ் பிக்கெட்டி கூறுகிறார். அது உண்மை என நிரூபிக்கும் வகையில் அதானி அம்பானி போன்ற இந்திய பணக்காரர்கள் உலக பணக்கார வரிசையில் இடம்பெற, எளிய மக்களோ ஒரு வேளை உணவு கூட கிடைக்க பெறாத நிலையிலும், மேலும் விலைவாசி ஏற்றத்தால் எதிர்காலமே சூனியமாக செய்வதறியாது திகைத்து நிற்கும் நிலைக்கு தள்ளியுள்ளது இந்த மோடி அரசு.

**– மே 17 இயக்க இணையதளத்திலிருந்து**

**(முற்றும்)**

## தீட்சதர்களை சட்டங்கள் கட்டுப்படுத்தாதாம்; ‘தினமலர்’ திமிர்

*“குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், தீட்சதர்களைக் கட்டுப்படுத்தாது. அது அவர்களின் இயல்பான வாழ்க்கை முறை. அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் தில்லை நடராஜன் கோபத்துக்கு உள்ளாக நேரிடும். தீட்சதர்கள் பிடிவாத குணம் கொண்டவர்கள். அவர்களுக்கு எஜமான் நடராஜன் மட்டுமே” என்று ‘தினமலர்’ ஆசிரியருக்கு கடிதம் வழியாக மிரட்டுகிறது.*

*2022ஆம் ஆண்டிலும் இப்படித் ‘திமிர்’ பிடித்து அலைகிறது ‘தினமலர்’ கும்பல்.*

*தமிழர்களால் பேரறிஞர் என்று போற்றப்படும் அண்ணாவை ‘இடியட்’ என்று பதிவு போடுகிறார் கிழக்குப் பதிப்பகம் நடத்தும் பத்ரிசேஷாத்ரி எனும் பார்ப்பனர். மாநிலங்களவையில் ‘இந்தி’ பற்றி ஏதும் தெரியாமலேயே அண்ணா பேசினாராம். இந்தப் பேர்வழிக்கு தமிழ் இணையக் கல்விக் கழக ஆலோசனைக் குழுவில் பதவி தந்தது எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி. இப்போது பதிவிட்ட அடுத்த சில மணி நேரங்களிலேயே தி.மு.க. ஆட்சி அப்பதவியிலிருந்து அவரை நீக்கியிருக்கிறது. அண்ணாவின் பெயரிலே கட்சி வைத்திருக்கும் குழுக்கள், அண்ணாவை இழிவுபடுத்திய பார்ப்பனரைக் கண்டித்து ஒரு வார்த்தைகூட பேசவில்லை. பார்ப்பன கொத்தடிமைகளிடமிருந்து இதை எப்படி எதிர்பார்க்க முடியும்?*

*பூணூல்கள் இப்போது ஒன்றிய ஆட்சி ஆதரவு இருக்கிறது என்பதால் தமிழர்களின் உணர்வுகளுக்கு சவால் விட்டு வருகின்றன.*

*இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். பார்ப்பனரல்லா ‘சூத்திர’ மக்கள் பார்ப்பனர்கள் ஆதிக்கத் திமிரை புரிந்து கொள்ள வேண்டும்.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அரசர்களை பார்ப்பனர்கள் தங்கள் வலையில் வீழ்த்தியது எப்படி?




(முதல் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வரவில்லை. பிராமணியம் என்பது மன்னர்களால் ஆதரவளிக்கப்பட்டு பிராமண குடியேற்றங்களால் உருவாக்கப்பட்டது. பேராசிரியர் அரசு கூறினாரே பல்லவர் காலத்தில் நிலங்கள் கொடுக்கப்பட்டது என்று. அதற்கு முன்பே துவங்கிவிட்டது. பிரம்மதேயம் என்பது முதலில் கொடுக்கப்பட்டது விந்திய மலைப் பகுதியில். அது அதிக எண்ணிக்கையில் விரிவாக்கம் செய்யப்பட்டது பல்லவர் காலத்தில். அந்த பிரம்மதேயம் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. பிரம்மதேயம் எதற்காக கொடுக்கப்பட்டது என்று குறிப்புகள் உள்ளன. இந்தக் குறிப்புகள் முதலில் எழுதப் பட்டது 'பிராகிருத' மொழியில். பின்னர் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தினார்கள். பல்லவர்களின் இறுதிக் காலத்தில் தமிழில் வந்தது. பல்லவர்கள் பிராமணர்கள் அல்ல. பல்லவர்கள் உள்ளூர் மக்கள். அவர்களை தங்களது மாய மோசடி வலையில் பார்ப்பனர்கள் வீழ்த்தினார்கள். தென்னகத்தில் சத்ரியர்கள் இல்லை என்று அவர்களது புராணம் கூறுகிறது. பிறகு எப்படி பல்லவர்கள் வந்தார்கள்? உள்ளூர் மக்களில் சிலரை விலை பேச முடியும். எப்படிப் பேச முடியும் ? "உங்களுக்கு நாங்கள் அந்த தெய்வீக அந்தஸ்தைத் தருகிறோம்". நீங்கள் 'பரத்வாஜ கோத்திரம்' என்று பல்லவ மன்னர்களுக்கு கூறுவார்கள். பரத்வாஜ கோத்திரம் என்பது பிராமண கோத்திரம். அந்த பல்லவ அமைச்சரவையில் அமைச்சர்களாக மாறிய இந்தப் புரோகித கும்பல் தனது கோத்திரத்தை அந்த மன்னனுக்கு கொடுத்து விட்டன. மன்னன் உடன் பிறந்தவன் சூத்திரன்; மன்னன் மட்டும் சத்ரியன். எந்தவொரு பல்லவ கல்வெட்டிலும் மன்னனை பிராமணன் என்று குறிப்பிடவில்லை. ஆனால் கோத்திரம் பரத்வாஜ கோத்திரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது இந்தியாவில் எங்கும் காணப்படுகின்ற பிராமணிய விரிவாக்கத்தின் ஒரு வெளிப்பாடு.

சோழர்களிடத்தில் என்ன கூறினார்கள்? கோத்திரத்தை கூறவில்லை. 'சூரியகுலம்' என்றார்கள். சேரர்களிடத்தில் 'அக்னிகுலம்' என்றார்கள். அங்கேயும் கோத்திரம் வரவில்லை. பாண்டியர் களிடத்தில் 'சந்திரகுலம்' என்றார்கள். அதே மன்னர்களிடம் இதற்கெல்லாம் ஒரு படி மேலே சென்று, 'நீ பிரம்மாவினுடைய பேரனுக்கு, பேரனுக்கு பிள்ளை' என்றார்கள். "நீ தேவ, அசுர போரில் தேவர்களின் பக்கம் நின்று அமிர்தத்தை எடுத்து கொடுத்தீர், இந்திரனுடன் போரிட்டு நீ வென்று விட்டாய். அர்ஜுனனை போரில் நீ வென்றிருக்கிறாய். குருக்ஷேத்திரப் போரில் பாண்டவர்கள் பக்கம் நின்று வெற்றி வாங்கி கொடுத்துவிட்டாய் என்று மன்னர்களைப் புகழ்ந்து அவர்களை தமதாக்கிக் கொண்டார்கள். இது வியாசரின் பாரதத்தில் இல்லை. அவர்களது எந்த வடமொழி புராணங்களிலும் இது இல்லை. கல்வெட்டுகளில் உள்ளன. ஏமாந்தவர்கள் நம்மவர்கள். தனக்கு இந்திரப் பதவி கிடைப்பதாக நினைத்துக் கொண்டு, தம் மக்களை பலிகடாக்களாக மாற்றினார்கள். நம்மை வீழ்த்தியதே நமது மன்னர்கள்.

நிலங்கள் என்பது சமூக சொத்து. அதை எடுத்து பிராமணர்களுக்குக் கொடுத்தார்கள்; உழைக்கின்ற மக்களையும் வேலைக்கு அனுப்பி வைத்தார்கள்; இது செப்பேட்டில் இருக்கிறது. பிராமணர்களுக்கு 'தரிசு நிலம்' தரக் கூடாது; சோழர்கள் காலம் யாருக்கு பொற்காலம்? பார்ப்பனர்களுக்குத் தான்! வைதீகத்தால் நாம் வீழ்ந்தோம்; வைதீகம் அறிவைக் கொண்டது அல்ல; நம்பிக்கையை, மோசடியைக் கொண்டது. அவர்கள் குறி வைத்தது ஆளும் பிரிவினரை. அவர்கள் வைதீகத்தில் வீழ்ந்தார்கள். மன்னராட்சி போய் மக்களாட்சி காலம் வந்து விட்டது. இப்போது மக்களை மயக்குவதற்கு சிலைகளையும் கோயில்களையும் பயன்படுத்துகிறார்கள். அண்ணாமலை கூறுகிறார்: ஸ்டாலின் தமிழை வைத்து வியாபாரம் செய்கிறார் என்கிறார். நீ என்ன செய்கிறாய்? மதத்தை வைத்து விபச்சாரம் செய்கிறாய்! அனுமனின் வாரிசுகள் அப்படித்தான் இருக்கும்.

சிற்றரசர்கள் பேரரசர்களாக மாறிய காலத்தில் பெருங்கோயில்களைக் கட்டினார்கள். அவை மக்களின் வரிப் பணத்தால் கட்டப்பட்டன. கட்டாயப்படுத்தி உழைப்பை உறிஞ்சி கோயில்கள் கட்டப்பட்டன. மக்களுக்குரிய இடங்கள் கோயிலுக்கு தரப்பட்டன. நில உடைமை யாளர்களாக இருந்த நம் மக்கள் தினக் கூலிகளாக மாற்றப்பட்டனர். எங்கு வளமான அரசுகள் இருக்கிறதோ அங்கு 'மறையவர்கள்' வந்து விடுவார்கள். அது என்ன மறையவர்கள்? வேதங்களில் உள்ளதை மக்களிடம் மறைத்ததற்காக இவர்கள் மறையவர்களானார்கள் என்றே நான் கூறுவேன். நாம் 'மறையோர்' அல்ல; அறிவார்ந்தோர்; இந்த மறையோர் சூழ்ச்சிகளில் எல்லாம் இலட்சியம் வைக்க வேண்டாம் என்றவர்தான் வள்ளலார். வள்ளலார், 50 ஆண்டு, 3 மாதம், 25 நாட்கள் உயிருடன் இருந்தார். அவருக்கு பல இலட்சியங்கள் இருந்தன. மக்களைப் பற்றிக் கவலைப் பட்டவர். மக்களை விட்டு விட்டு தற்கொலை செய்து கொண்டார் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நந்தனைப்போல், பாணனைப் போல், ஆண்டாளைப் போல் அவரும் ஜோதியில் அய்க்கியமாகி விட்டார் என்று சொன்னார்கள். யாரெல்லாம் இப்படி ஜோதியில் அய்க்கியமானவர்கள் என்பது நமக்குத் தெரியும்.

நடராசன் கோயிலில் அப்பரும், சுந்தரரும் மீண்டும் மீண்டும் போனார்கள்; வந்தார்கள். அவர்கள் சைவர்கள் என்ற உயர்குலப் பிறவி யாயிற்றே! ஆனால் நந்தன் மட்டும் போக முடியாமல் தடுக்கப்பட்டான். "உள்ளே ஒரு முறை அனுப்பி வை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று நடராசன் அழைத்திருப்பான் போலிருக்கிறது. போன நந்தன் திரும்பி வரவில்லை. இது ஒரு எச்சரிக்கை. நந்தனைப்போல் எவராவது உள்ளே வரவேண்டும் என்று போராடினால் திரும்பி வர மாட்டீர்கள் என்று விடுக்கப்பட்ட எச்சரிக்கை தான் இது. ஆண்டாள் திருவரங்கம் கோயி லுக்குப் போனவர் திரும்பவில்லை. அதேபோல் திருப்பாணாழ்வாரும் திருவரங்கம் கோயிலுக்குப் போனவர் திரும்பவில்லை.

நந்தன்களும் திருப்பாணாழ்வார்களும் ஆண்டாள்களும் அதற்குப் பிறகு உருவாகாமலேயே போய் விட்டார்கள். பவுராணிகம் சிலைகள், கோயில்கள், ஆகமங்களை வைத்து - நம்மைப் பிரித்தது; அழித்தது. யக்ஞங்களை வைத்து ஆட்சியாளர்களை தனது கைப்பிடிக்குள் வைத்து நம்மை சுரண்டியது. இந்த வைதீகமும் பவுராணிகளும் வர்ணபேதத்தை தெய்வ அங்கீகரமாக்கியது. சங்கரர் 6 மதங்களை ஒருங்கிணைத்து இந்து மதத்தைக் கட்டமைத்தார். அதில் அவர்களின் கடவுளான 'பிரம்மா' வரவில்லை; ஏன் வரவில்லை என்று எவராவது கேட்டார்களா? சன்மதத்தில் உள்ள கடவுள்கள் பார்ப்பனர்களின் கடவுள் அல்ல. ஆனாலும் அந்தக் கடவுளுக்கு அர்ச்சகர் ஆகும் உரிமை அவாளுக்கே உண்டு என்பதற்காகவே சங்கரர் இந்த இணைப்பை உருவாக்கி, புராணம், இதிகாசங்களை எழுதி ஆகமங்களைக் க ாட்டி, தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன. வள்ளலாரும் இப்படித்தான் போனவர் திரும்பவில்லை. ஜோதியில் கலந்து விட்டார் என்றார்கள். ஏன் திரும்பவில்லை? காரணம், அவர் வைதீகத்தை மட்டுமல்ல பவுராணிகத்தையும் எதிர்த்தார்" என்றார் பேராசிரியர் கருணானந்தம்.

# ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயல் திட்டங்கள்



திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு வடக்கு மாவட்ட கழக மாதந்திர கலந்துரையாடல் கூட்டம் 16.10.2022 ஞாயிறு அன்று கோபி நாகப்பன் இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையேற்க, அருளானந்தம் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மாவட்ட கழகத்திற்கு பொறுப்பாளர்கள் மாற்றப்பட்டு புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

   மாவட்டத் தலைவர் - நாத்திக சோதி, மாவட்ட செயலாளர் - எலத்தூர் செல்வக்குமார், மாவட்ட அமைப்பாளர் - சதுமுகை பழனிச்சாமி, கோபி நிவாசு, மாவட்ட பிரச்சார அணி செயலாளர் - வேணுகோபால், கோபி ஒன்றிய செயலளர் - செகநாதன், கோபி நகர தலைவர் - ரகுநாதன், கோபி நகர செயலாளர் - அருளானந்தம், நம்பியூர் ஒன்றிய செயலாளர் - ரமேசு, நம்பியூர் ஒன்றியத் தலைவர் - அழகிரி, சத்தி ஒன்றிய செயலாளர் - புதுரோடு சிதம்பரம், TN பாளையம் ஒன்றிய செயலாளர் - கருப்பணன், அந்தியூர் ஒன்றிய செயலாளர் - சென்னியப்பன், அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் - வேல்முருகன், பவானி ஒன்றிய செயலாளர் - வினோத், பவானி ஒன்றிய அமைப்பாளர் - செல்வம் ஆகியோர் புதிய பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

2. வருகின்ற 9.11.2022 அன்று குருவரெட்டியூரில் பெரியார் பிறந்த நாள் விழா மற்றும் பெரியார் தொண்டர் பிரகலாதனின் முதலாம் ஆண்டு நினைவு நாள் பொதுக்கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில் மழை காலம் முடியும் வரை வாரந்தோறும் ஒவ்வொரு பகுதி தோழர்களின் இல்லங்களுக்கு செல்வது என்றும் அனைவரையும் ஒருங்கிணைத்து குடும்ப விழா நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட கலந்துரையாடல் கூட்டத்தில் கழகத்தின் வெளியீட்டு செயலாளர் கோபி இளங்கோ 60 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தோழர்களால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 27th October 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN